எடுக்கமுடியுமோ அந்த நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கு மென்ற உறுதியை நான் இந்த அவைக்குத்தெரிவிக்க விரும்பு கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய கனிவான வார்த்தைகளால் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள நிலங்களை ரெவின்யூ நிலங்களாக மாற்றி, விரைவிலே பட்டா வழங்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இதற்குப்பதில் சொல்லி விட்டேன் என்று நான் நம்புகிறேன். திருப்பித் திருப்பிக் கேட் பதன் மூலம் திட்டவட்டமான பதில் கிடைக்குமென்று எதிர் பார்க்கக்கூடாது.

தருமபுரி மாவட்டத்திற்கு அதியமான் மாவட்டம் பெயர் சூட்டுதல்.

* 8268 திரு. வ. முல்லைவேந்தன் :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்திற்கு அதியமான் மாவட்டம் என்று பெயர் சூட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : கொடுக்கல் இலாதானை பாரி என்றாலும், கொடுப்பாரிலை என்பார்கள். ஆனால் நடை பெற்றுக் கொண்டிருப்பதோ, கைமாறு கருதாமல் மாரிபோல் கொடுக்கின்ற கலைஞருடைய அரசு. தங்கத் தமிழில், சங்கத் தமிழால் அதியமானையும், ஔவையாரையும் பாராட்டி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

திரு. வ. முல்லைவேந்தன்: அதியமானின் பெயரை தர்மபுரி மாவட்டத்திற்குச் சூட்ட இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மாவட்டத்தின் பெயர் தர்மபுரி மாவட்டம். தர்மம் தலை காக்கும். ஆக அதுவே இருக்கட்டும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு மாவட்டங்களுக்குப் பெயர்களைச் சூட்டுகிற நேரத்தில் தலைவர்களின் பெயர்களை எல்லாம் நாம் சூட்டிக் கொண்டிருக்கிறோம். தர்மபுரி, சேலத்திலிருந்து பிரிந்து 25 ஆண்டுகளாகி, விரைவில் வெள்ளி விழா கொண்டாட இருக்கிறது. அன்றைக்கு மாவட்டம் பிரிந்த போது, தலைவர்களின் பெயர்களைச் சூட்டுகிற நிலைமை இல்லாமல் இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமை இருக்கிறது. கலைஞர் அவர்களுடைய அரசில், நாவுக்கரசர் நாஞ்சிலார் அவர்கள் மறு ஆய்வு செய்து தர்மபுரி மாவட்டத்திலுள்ள மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில், பேரவைத் தலைவர் போன்ற தமிழ் அறிஞர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகிற வகையில், அந்த மன்னனுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் அதியமான் மாவட்டம் என்று பெயர் சூட்ட முன்வருவாரா அல்லது மறு ஆய்வு செய்வாரா அல்லது வெள்ளி விழாவிலே பங்கேற்று கலைஞர் அவர்களும், நாஞ்சிலார் அவர்களும் அதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலை நேரம், குளிர்ச்சியாகவே இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தர்மபுரி மாவட்டம் என்ற பெயரைப் பெற்று, வெள்ளி விழா கொண்டாடுகிற இந்த நேரத்தில் தர்மபுரி மாவட்டமாகத்தான் அது இருக்கும் என்று உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திற்கு அதியமான் மாவட்டம் என்று பெயர் சூட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று அமைச்சரவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அப்படி இல்லை என்றாலும், அவர் கொடுத்த நெல்லிக் கனியை உண்ட ஔவையார் பெயரில் அந்த மாவட்டத்தை அமைக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

9-45 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: கிழவியின் பெயரை வைப்பது சரியாக இருக்காது. (சிரிப்பு)

[1990 ஏப்ரல் 20

திருமதி. பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் ' Point of Order ' வராது.

நகராட்சிகள் திரையரங்குகளை கட்டி நடத்த அனுமதி

* 3100 திரு. என். பழனிவேல் மற்றும் திரு. வி. இராமசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நகராட்சிகளே திரையரங்குகளைக் கட்டி நடத்த அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள் இன்று நிதி நெருக்கடியால் பெரிய சிரமத்துக்கு உள்ளாகிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே அவைகளின் நிதிக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கு, திரையரங்குகள் கட்டி அவைகளினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சிகளைப் பொறுத்த வரையில் உலக வங்கியின் மூலமும் மற்றும் நிர்வாகத் துறையின் மூலமும் கடன் பெற்று லாபகரமான காரியங்களில் ஈடுபடலாம் என்ற விதியின் கீழ் வணிக வளாகம், பேருந்து நிலையங்கள் மற்றும் இது போன்ற வருவாய்ப் பலன் தரத்தக்க பணிகள் கட்டப்படுவது உண்மை. ஆனால் அப்படிப்பட்ட பணிகள் எல்லாம் மக்களின் மிக அத்தியாவசியத் தேவையைக் கருதி எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இதுபோன்ற பணிகள் எல்லாம் முடிவுற்று பிறகு அந்தப் பணியை எடுத்துக் கொள்ளலாம் என்றும், திருப்தி கரமான நிலை எந்த நகராட்சிக்கு இருக்கிறதோ அந்த நகராட்சி விரும்பினால் அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 75 நகராட்சிகளில் பெரும்பாலும் எல்லா நகராட்சிகளிலும் வரக்கூடிய வருமானம்